அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 28/2016

எனது இலக்கம்: EST-2/05/POL/0079
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07.

2016.12.01

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தொழில்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தேசிய தொழில் தகைமைகளை ஏற்றுக் கொள்ளுதல்</u>**

சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களில் தொழிநுட்ப மற்றும் தொழிற்றுறைகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் போது தொழில் தகைமைகளாக, தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 3 அல்லது தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 4 உடன், கல்வித் தகைமைகளாக கல்விப் பொதுத் தராதர (சா.த) பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதர (உ.த) பத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், NVQ 3 மற்றும் NVQ 4 தகைமையைப் பெற்றிருத்தல் முறையே, கல்விப் பொதுத் தராதர (சா.த) பத்திரம் மற்றும் கல்விப் பொதுத் தராதர (உ.த) பத்திரப் பரீட்சையில் சித்தியடைவதற்குச் சமமாகக் கருத்திற் கொள்வதற்கு, 2016.06.28 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதனடிப்படையில், தொழிநுட்ப மற்றும் தொழிற்றுறைகளிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும்போது கோரப்படுகின்ற மேற்கண்ட கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்யாத, எனினும் தேசிய தொழில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கும் அப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பங்களை அளிக்கும் பொருட்டு, ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் தவிர ஏனைய தகைமைகளை அவர்கள் பூர்த்தி செய்திருந்தால், அவ்விண்ணப்பதாரர்களையும் உரிய பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ள முடியும்.

03. மேலே 02ஆம் பந்தியின் ஏற்பாடுகளை உள்ளடக்கி உரிய சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்தியமைத்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது அனுமதியைப் பெறுவதற்கு உரிய நியமன / நிருவாக அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/. ஜே.ஜே.ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு